DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.118/2025**
Prosecution Witness P.W.14

Name : **திருமதி. லதா (கூடுதல் சாட்சி)** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 10.03.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மதுக்கரை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கோவை மாவட்டத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். மேற்கண்ட நீதிமன்றத்தில் நான் கடந்த 07.01.2026 முதல் நான் பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் எனக்கு எங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CMP.No.1897/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அதில் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, சாட்சிகள் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவற்றை ஆஜர் செய்வதற்கு எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த மனு தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நான் நீதித்துறை நடுவரிடம் உத்தரவு பெற்று இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன்.

2. அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் சான்றுடன் தாக்கல் செய்கிறேன், அவை அ.த.சா.ஆ.19 (வரிசை), அந்த மனுதாரர் அஜ்மீர் அலி, த/பெ. காஜா மொய்தீன், கம்பம் மேட்டு காலனி தெரு என விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த லாரி நம்பர் TN 60 AV 57 71, அது Ashok leyland லாரி. அதன் ஆர்.சி புத்தகம் எங்கள் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வைக்கவில்லை. ஜெராக்ஸ் மட்டுமே எங்கள் வசம் உள்ளது. கே.ஜி சாவடி காவல் நிலையத்திலிருந்து இந்த வாகனம் ஆனது குற்ற எண் 166/2022

வழக்கு சட்டப்பிரிவுகள் 11 (1) (a), 11 (1) (d), 11 (1) (e), 11 (1) (b), Prevention of cruelty to animals act என்ற சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த முதல் தகவல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள எதிரிகள் சிவா த/பெ. ஜெயக்குமார், மன்சூர் த/பெ. சித்திக் ஆகியோர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

3. இந்த வழக்கில் இதனால் வரை இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்கண்ட வாகனம் ஆனது அஜ்மீர் அலி என்பவர் பெயரில் உள்ளது அந்த இடைக்கால மனுவும் தாக்கல் செய்த நபரும் அவரே தான் தாக்கல் செய்தார்.வழக்கறிஞர் ஏ.கே.ஏ. லா அசோசியேட்ஸ், கோவை என்ற முகவரி சார்ந்த வழக்கறிஞர் அந்த மனு தாக்கல் செய்து 13/9/2022 ஆம் தேதியன்று அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. சுருட்டிஸ் பெருமாள், த/பெ.ராமசாமி மற்றும் சிரஞ்சீவி த/பெ.பாண்டி ஆகியோர் ஜாமீன்தாரராக உள்ளதார்கள். PR.No.80/2022—ஆக அது கோப்பில் எடுக்கப்பட்டு 13.12.2022—ம் தேதியன்று ஜாமீன்தாரர்கள் கொடுத்ததன் பேரில் வாகனம் உரிமையாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் ரூ. 2 லட்சம் ஜாமினும், ஜாமின்தாரர்கள் தலா ரூ. 2 லட்சம் ஜாமீன் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டதன் பெயரில் வாகனம் உரிமையாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முத்துக்குமார், ரதிபிரியா என்பவர் பெயரில் எந்த வாகனமும் இந்த மனு தொடர்பாக இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரி சதாம் உசேன் என்பவர் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.10 17:16:13 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.